உ

ஸ்ரீராமஜெயம்,

ஸ்ரீமகாபாரதத்தில் ஸ்ரீகிருஷ்ணன் தூதில்

சிவந்த பஞ்சகம் பீமன் துரியன் சண்டை.

OFFICE OF THE REGISTRAR
2 SEP 1907
MADRAS.

# நல்லறவான் களப்பலி யாகமம்.



பீமன் (3) மூன்றும் பாகம். அரவான்

திருச்சிராப்பள்ளி தென்னூர் நாடக வுபாத்தியாயர்,

பிரம்மநாயகம் பிள்ளையவர்களால்,

இயற்றப்பட்டு.

சென்னை கோமளீஸ்வரன் பேட்டை
ஜகத்பிரகாச அச்சுக்கூடத்தில்,
பதிப்பிக்கப்பட்டது.

1907.

இதன் விலை] ரிஜிஸ்டர் காபிரைட். [பை 6.

ரிஜிஸ்டர் காப்பிரைட்டின் அறிவிப்பு.

இதனால் சகலமான கனவான்களுக்கு தெரியப்படுத்துவது யாதெனில் ஸ்ரீ கிருஷ்ணன் தூதில் நல்லறவான் களப்பலி யாகமம் 1-2-3 பாகம் புஸ்தகத்தை மகாகனம்பொருந்திய கெவரண்மெண்ட் அவர்களது 1907 ஷ 25 வது செக்ஷன் 8 வது ரூல்சின்பிரகாரம் செய்யப்பட்டிருக்கிறபடியால் இன்னூலை எவர்களும் அச்சிடக்கூடாது.

உ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீகிருஷ்ணன் தூதில்,

# நல்லறவான் களப்பெலி யாகமம்,

சிவந்த பஞ்சகம் பீமன் துரியன் சண்டை.

வெண்பா சங்கராபரணம்.

சீர்பெருகும்மணிநகரபட்டணத்தில் தான்வசிக்கும் செல்வியான
பார்புகழும் நாககன்னிபயின்ற திருநல்லறவான் பாடல்தன்னை
வீறுடனே சாற்றுதற்கு—விமலப் பறனுமை பெற்றிடும் விகடக்
கரிமுகனே திரு—கமலப்பதமிக வைத்து நீ கார்.

துரியோதனன் விருத்தம்.

பீமனும் துரியன்றானும் பலமதுபார்க்கவேண்டி
நேமமாய் ஐவர்தானும் நெடியமால் சகாயம்பெற்றார்
பாண்மையாய் யெந்தன் சேனைபழுதறப்போச்சுதென்று
வர்ண்மையாய் துரியராஜன் மகிழ்ச்சியாய் சண்டை செய்தான்

பீமனுக்கும் துரியனுக்கும் சண்டை.

தரு பல்லவி.

பீமஜேனனுக்கும் துரியோதனனுக்கும்
விழைந்ததே சண்டை

அனுபல்லவி.

பூமிகிடுகிடென அசைந்தசைந்தாடவே
பொன்னுலகத்தோர்களும் பொரிகலங்கிவாடவே
தீமைசெய்காலயெமன் திடுக்கிட்டங்கோடவே
செரிந்தகோபாக்கினி ஜெகமெங்கும்மூடவே
சிந்தை துயரோடு நகரும் நெழிக்கவே
அந்தத்தினி னுயர் மூவரும் ஒழிக்கவே (பீம)

சரணம்.

ருவர்க்கொருவர் யெதிர் யெதிர் கின்று சபதங்கள்
புரைத்திந்த புவிமேலே யாறும்
வெறுவி விதிர் விதித்து விம்மியோடவே இறு
மேறுமலைகள்போல
பெரிய கெதைகளோடு இடவலமாய்சுத்தி
பெரிய சினத்தாலே அண்டம்
பிளக்கவுர்ப்பாதகெற்சணையிட்ட ரத்தங்கள் (பிரிடஒருகாலே)
அரியபெரும் கெதைகளாலே யெழும்பிமுத்தி
அண்டத் தெழும்பி பின்னும் அவனிமேல் வந்துசுத்தி
வரியும் கைய்களால் இடி வீழ்வதெனவேகுத்தி
விசையாய் கால்களினாலே மேனி நடுங்கயெத்தி
வீரிய யெண்டிசை முற்றிலும் நோகவே
மீரிய அண்டம் அனுப்பொடி யாகவே (பீம)
பயங்கொள் அறவக்கொடி அதிபனும் வீமனை
பார்த்துவெகுண்டு சித்தம் (வுந்தன்)
வுயிர்னிலைதன்னைச்சொல்லு யானும் சொல்கிரேன் அப்பால்
ஒத்துச் செய்கு ஓம் யுத்தம்
நயமுடன்கேழ்க்கயெ...ங்குசிறசினில் நீ நவில்வேனவெகுற்ற
கொண்ட கயவன் யெனக்கு புறுவற்றினில் யென்
முக்காலும் சொல்லியபத்தம்
வயங் கொள் அந்த வீமன் சிரசின் மேலடிக்க
வருத்தம் அவன் மூர்ச்சையாய் வீழ்ந்தான் பல்லைக்கடித்து
ஜெயங்கொள் அந்த வீமன் யெழுந்தபாவி துடித்த
சிரியவென்புலி யென்னவேபோலும்
மீருபுயத்தினில் நன்னியே மேலும் (பீம)

பீமன் விருத்தம்.

கெக்கரிப்பாகவேதான் கீர்த்தியும் புகழும் பெற்ற
மிக்கதோர் வீமன்றானும் வி...சித்திற கெதையெடுத்து
துக்கவே துரியன்றானும் துள்ளியே அலரிவீழ
கைக்கெதையிறுவர்கொண்டு கடியபோற்செய்கின்றாரே

## பீமனுக்கும் துரியனுக்கும் இரண்டாவது சண்டை

பல்லவி.

கெதாயுத்தமானர் யிருவர்களும் கெதாயுத்தமானர்

அனுபல்லவி.

கெத்தாயுமானர் கிளயபி யிருவர்களும்
கேசரிமாக்கமாய் [illegible]வர்கள் மகிழவும் (கெதா)

சரணம்.

அந்தறதேவதைதுந்திமி முழங்கவும்
அரிகோபாலனும் அரிகினில் யிருக்கடவும்
தொந்த மதாகவே துரியனும் வீழவும்
துர்க்கை சாமுண்டியும் தொந்தோ மென்றிடவும்

(துரியோதனன் புலம்பல் கன்னிகள்).

யென்ன செய்வேன் யேது சேய்வேன் யீஸ்பறனே சுவாமி
இந்த விதி வந்துதைய்யோ யீஸ்பறனே சுவாமி
முன்னமேனான் செய்த வினை யீஸ்பறனே சுவாமி
மூண்டுதைய்யோ குருக்ஷேத்திறத்தில் யீஸ்பறனே சுவாமி
பாவியவன் ஜகுனியாலே யீஸ்பறனே சுவாமி
பாழ் நறகம் வீழப்போறேன் யீஸ்பறனே சுவாமி
பஞ்சவருக்கும் துரோபதைக்கும் யீஸ்பறனே சுவாமி
பாதகங்கள் தேடலுற்றேன் யீஸ்பறனே சுவாமி
நடக்கும் வழிதனிலே யீஸ்பறனே சுவாமி
நச்சு முள்ளை நட்டு வைத்தேன் யீஸ்பறனே சுவாமி
குளிக்கும் குளம் தனிலே யீஸ்பறனே சுவாமி
கூர்வசுக்களையான் யூன்றி வைத்தேன் யீஸ்பறனே சுவாமி
படுத்திருக்கும் அரணமனையில் யீஸ்பறனே சுவாமி
பாம்புகளை தான் க[illegible]ழ்த்தேன் யீஸ்பறனே சுவாமி
வுண்ணுமந்த சாதம் தன்னில் யீஸ்பறனே சுவாமி
நஞ்சுகளை தான் கலந்தேன் யீஸ்பறனே சுவாமி
அறக்குனல் மாளிகை கட்டி யீஸ்பறனே சுவாமி
(அதில்) அய்வரை குடியும் வைத்து யீஸ்பறனே சுமாமி
அசந்துறங்கும் வேளையிலே யீஸ்பறனே சுவாமி
அனலைக் கொளுத்தச் சொன்னேன் யீஸ்பறனே சுவாமி

| | |
|---|---|
| அதர்க்கும் தப்பி பிழைத்தார்கள் | யீஸ்பறனே சுவாமி |
| ஆயருட புண்ணியத்தால் | யீஸ்பறனே சுவாமி |
| வஞ்சனையாய் சூதாடி | யீஸ்பறனே சுவாமி |
| ஐய்வறை மானபங்கம் செய்துவிட்டேன் | யீஸ்பறனே சுவாமி |
| ஐய்வரிட்தேவியறை | யீஸ்பறனே சுவாமி |
| சபையரிய்துகிலுரிந்தேன் | யீஸ்பறனே சுவாமி |
| 12—தன் வருடம் | யீஸ்பறனே சுவாமி |
| ஐய்வறை பாறவனம் ஒட்டிவைத்தேன் | ஈஸ்பறனே சுவாமி |
| தருமரிடபொருவையினல் | யீஸ்பறனே சுவாமி |
| இப்போ தறணியாளலாச்சுதையோ | ஈஸ்பறனே சுவாமி |
| பாவியான் செய்கொடுமை யினல் | ஈஸ்பறனே சுவாமி |
| யெனக்கு பாழ்நறகம் கிடைத்துதைய்யோ | ஈஸ்பறனே சுவாமி |

துரோபதை காளியாய் வருகிற விருத்தம்.

ஆண்டு பனிரெண்டும் சென்று அக்கியாதவாசம் செய்து
தோன்றவே துரியனுதி தொன்னூற்றெண்பது பேற்தன்னே
தாண்டியே கறுவருத்து என் தர்ம்ம பூபதிகள் நின்றார்
மீண்டியே ரணகளத்தில் மெல்லிதுரூபதையும்வாருள்

தரு பல்லவி.

| | |
|---|---|
| தேவி வாருள் ரண பததிற | காளி வாருள் |

அனுபல்லவி.

| | |
|---|---|
| தேவியும் வாருள் | சிறந்த படுகளம் |
| ஓடி அரவக்கொடுயோனே | தேடியே (தேவ |

சரணம்.

| | |
|---|---|
| கூரியசப்தம் குரையாமல் | நிரைவேற |
| வாரிய வுதிரத்தை மகிழ்ச்சிபாய் | தடவவும் (தேவி) |
| வனவாசம் ஒட்டினமாபாவி | இவனென்று |
| மண்டியிட்டுக்கொண்டு | மணிகுடலெடுக்கவும் (தேவி) |
| மாது துரூபதை யாள் | மன்னர் சபையில் சொன்ன |
| வாக்குத் தவராமல் | மலர் கூந்தல் முடிக்கவும் (தேவி) |
| குருக்ஷேத்திரம் தன்னிலே | கொற்றவர் சேனையை |
| கொள்ளை கொள்ள வந்த | கோபாலன் தங்கையர் (தேவி) |

(துரோபதைக்கும் துரியோதனனுக்கும் தர்க்கம்.)

ஆரம்மா தாயே நீ தான் ஈஸ்பரியே யெனம்மணி
அர்த்தரூத்திரி தன்னில் வந்தாய் ஈஸ்பரியே யெனம்மணி
அர்த்தரூத்திரி வந்தவன்னுன் அகோற காளியடடா
அருங்களத்தை பார்க்கவந்தேன் பாவி துரியா
பாவி யென்றும் சொல்லுகிருய் பராசத்தியே யெனம்மனி
பட்சம்வைத்து கார்க்கவேனும் பருசத்தியே எனம்மனி
பார்க்கதான் வந்தேனடா பாவி துரியா அடடா
பஞ்சவர்கள் தேவியடா பாவி துரியா
பஞ்சவர்கள தேவி யென்ருல் பருசத்தியே எனம்மனி
பட்ச்சிக்க ஓரச்சிக்க ஓ பருசத்தியே யெனம்மணி
பக்ஷிக்கத்தான் வந்தேனடா பாவி துரியா அடடா
உன் பழிவாங்க வந்தேனடா பாவி துரியா அடடா
பழிவாங்க வந்தேனென்ருய் பருசத்தியே எனம்மணி
பாலனம்மா வுந்தனுக்கு பருசத்தியே எனம்மணி
பாலனென்று சொல்லுகிருய் பாவி துரியா அடடா
நீ பாற்சபையில் சொன்ன தெல்லாம் பழுதாய் போச்சுதோ
போச்சுதென்றும் சொல்ல வந்தாய் பருசத்தியே எனம்மணி
பிழைபொறுத்து கிருபை செய்வாய் பருசத்தியே
கிருபை செய்ய வந்தேனடா பாவி துரியா அடடா
வுன்னை கீரிநெஞ்சை பிளப்பேனடா பாவி துரியா அடடா

துரோபதை விருத்தம்.

கீரியே பிளப்பேனென்று கிளிமொழி வார்த்தை சொல்ல
பாரெல்லாம் ஆண்டமன்னன் பதைத்துடல் மெய்கலங்கி
கூரிய சப்தம்போலே கொற்றவன் மார்மேல் நின்று
வீரியத்துடனே நெஞ்சை வெட்டினுன் வெட்டினுளே.

ஷை விருத்தம்.

வெட்டியே பிளந்து நெஞ்சை மெய்குழல் துரோபதையும்
கொட்டிய வுதிரம்தன்னை கோதையும் கூந்தல்கேற்றி
பட்டியபாண்டவாளை பாங்குடன் விழுங்க வென்று
திட்டமாய் வருகும்போது ஸ்ரீகிருஷ்ணரும் தடுக்கலுற்ருர்.

கிருஷ்ணர் விருத்தம்.

பாண்டவாள் தன்னைத்தானே பாங்குடன் விழுங்கவென்று
தாண்டவமாடியேதான் சப்தமும் கூரிவாருய்
மூண்டதோர்பாறதம் தான் முடியவும் யில்லை கண்டாய்
வேண்டிய காரியாக மெல்லிய பிரந்து தீர்ப்பாய்.

(வசனம்.)—கேளும்மா துரோபதா 18-நாள் சண்டை ஆரம்பித்தோம் இப்போது 17 அரை நாளையில் பாரதம் முடிவாய் விட்டது இன்னும் அரை நாள் சண்டைபாக்கி நீ அக்கினிஸ்தானம் செய்துவா அம்மணி.

துரோபதை விருத்தம்.

பாண்டவர் சமர்புரிந்து பதினேற்றக்குரோணி தன்னை
மாண்டிட கருவ நச்சு வல்லாணமையுள்ள ருஜர்
தாண்டியே குருக்ஷேத்திரத்தில் தர்ம பூபதிகள் பார்க்க
ஆண்டவன் வுரைபடிக்கி அக்கினி மூழ்கி வாராள்.

தரு கன்னிகள்.

அக்கினி மூழ்கிவாருள்பருசத்தி அக்கினிமூழ்கிவாருள்

அனுபல்லவி.

அக்கினி மூழ்கிவாருள் அருமை குருகுலத்தாள்
விக்கினம் கிளையாமல் மெல்லி துரோபதை யாளும் (அக்கி)

சரணங்கள்.

பஞ்சவ ரைவரையும் பருசத்தி பாங்குடன் தான் விழிங்கி
இந்த அக்கினிகுள்ளாக பருசத்தி அபிக்கியமாயிடுவாள் (அக்)
அண்ணனர்மாயவரும்சொன்னசொல்லைஆமென்றுநிச்சயித்து (தன்)
ஆங்காற கோறத்தையும பருசத்தி அன்பாகத்தானடக்கி (அக்)
அகார வுகாறமுமாய் பருசத்தி அன்பத்தோறக்ஷறத்தாள்
வகாறமெனும் வீட்டில் பருசத்தி வசிபமாய் னின்றிடுவாள் (அக்)
தில்லை சிதம்பறத்திலே பருசத்தி தேவியாய் நின்றவள் தான் (இந்த)
யெல்லைபை ஒறடியாய்பளந்த யெம்பெருமாள்சகோதிரியாள் (அக்)
பாறதப் போறதையும்பருசத்தி பார்த்து மேதானிருந்து (இங்கே)
வீரியமாகவேதான் துரியனை வெட்டி ஜெயம் கொண்டவள் (அக்)
வெட்டி ஜெயம் கொண்டுமேபருசத்தி

வேந்தர்கள் அய்வரையும் இடமாய்காறப்பேனென்று
கிருஷ்ணர் சொன்ன சொல்லுக்கு கீழ்ப்படிந்து (அக்)
சிருவன் திருச்சிநகர் வளர்ந்தோங்கும் தென்னூர்பள்ளத் தெருவில்
இந்த வீறுள்ள மங்கையிலே விளையாட
செல்வி துரோபதையும் வந்தேன் (அக்)
அன்பத்தோறக்ஷசறத்துள் யெனம்மணி ஆடும்தயாபரியே
வுன் மைந்தன் பிர்ம்மதாசனை ரக்ஷிக்க நீவாருய்தயாபரியே (அக்)

மங்கள விருத்தம்.

மூவருக்கும் தேவருக்கும் தேவரூடு
முனிவருக்கும் முன் இந்த கதையைச்சொன்ன—
நால்வருக்கும் பாண்டுவுக்கும் குந்தியற்கு
நற்றம்பி மாற்களுக்கும் துரோபதைக்கும்
ஆவருக்கும் கோவருக்கும் ஐவருக்கும்
ஆள்வாரில்யேரிவரும் கிருஷ்ணருக்கும்
யாவருக்கும் இதைப்படிப்போற்கேழ்ப்போருக்கெல்லாம்
வளம் சொல்வேன் பாறதமங்களம் சொல்வேனே

மங்களம் பல்லவி.

ஆதிவியாசருக்குமங்களம் நல்ல அஸ்தினபுரிதனக்கு மங்களம்

அனுபல்லவி:

நாதன் தர்மபுத்திறர்கும் நங்கை துரோபதியாளுக்கும்
காதலர்கள் நால்வருக்குமங்களம் நல்ல (ஆதிவியாசருக்கும்)

சரணம்

பொய்சொல்லாவாசனுக்கும் பூச்சக்கிற போஜனுக்கும்
வைபோகவுல்லாசனுக்கும் மங்களம் (ஆதி)
பக்தியான கதை தன்னை பாங்குடன் படித்தவர்க்கும்
நித்தமும் துதித்தவர்க்கு மங்களம் (ஆதி)
சீருள்ள திருச்சினகற்
தென்னூர் கிறுமத்தில் வசிக்கும் பேறுள்ள
பிரம்ம நாயகம் பிள்ளையவர் தங்களுக்கும் மங்களம் (ஆதி)

முற்றிற்று.

இன்னூல் வேண்டுபவர்கள்.

சென்னை புரசைவாக்கம், ஆதியப்பமுதலியார் வீதி 3வது கெம்பர்வீடு நாடக உபாத்தியாயர் பிரம்மநாயகம்பிள்ளை அவர்களிடத்தில்மூன்றுபாசமும் கிரையத்திற்கு பெற்றுக் கொள்ளலாம்.

1809